பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 25 திங்கட்கிழமை (9-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 254

### உலக ஒத்துழைப்பு இயக்கம் சமர்ப்பித்த

# ஐ. நா. மத்தியஸ்த யோசனை: ஸ்ரீலங்கா அரசு நிராகரித்தது!

## சமஷ்டி அரசமைப்பு முக்கிய சிபார்சு

கொழும்பு ஆகஸ்ட் 9

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தைக் கோர வேண்டும் என்று உலக ஒத்துழைப்புக்கான அமைப்பு சமர்ப்பித்த சமாதானத் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்து விட்டது.

நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்கள் சமர்ப்பித்த இந்தச் சமாதானத் திட்டத்தில் சமஷ்டி அரசமைப்பை உருவாக்குதல். ஐ நா. மேற்பார்வையில் யுத்த நிறுத்தம் செய்வது, தேர்தலை நடத்துவது ஆகியன முக்கிய அம்சங்களாக அமைந்துள்ளன.

இனப்பிரச்சினையில் வெளியார் தலையீடு எதற்கும் அவசியம் இல்லை என்று கூறி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தத் திட்டத்தை நிராகரித்துள்ளார்.

கனடாவின் தலைமையகத்தைக் கொண்டியங்கும் உலக ஒத்துழைப்புக்கான அமைப்பின் (World Council For Global Co-operation) சார்பில் நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்கள் பிரஸ்தாப சமாதானத் திட்டத்தைத் தயாரித்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ஜோர்ஜ் வேரல்டு, அயர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் மயூரேஷ் மக்குறே, பெல்ஜியத்தைச் சேர்ந்த பேராசிரியர் இல்யான் பெக்கோஷின், நெதர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜோன்தின் பேகன் ஆகியோரே அந்த நால்வரும் ஆவர்.

அந்தச் சமாதானத் திட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கைதிகளின் உண்ணாவிரதம் இன்று பன்னிரண்டாம் நாள்

யாழ்ப்பாணம், ஆக. 9

தமது விடுவிப்பு தொடர்பாக முடிவு எதுவும் எட்டாத நிலையில் தாம் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொள்வதாக யுத்தக் கைதிகள் தெரிவித்தனர்.

தமது உண்ணாவிரதத்தை நேற்று 11 ஆவது நாளாக அவர்கள் தொடர்ந்தனர்.

தாம் நடக்க முடியாத பலவீனமான நிலையில் உள்ளதாகவும் —

தமது மூட்டுக்கள் வலியெடுப்பதாகவும் — ''புலிகளின் குரல்'' வானொலிக்கு அவர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

(உ-3)

## கைதி ஒருவரின் பெற்றோர் இன்று கொழும்பு பயணம்

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளில் நந்தன சமன்கிறி என்பவரின் பெற்றோர்கள் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் உதவியுடன் இன்று கொழும்பு திரும்பவுள்ளனர்.

நந்தனவின் தாயாரான திருமதி லதா சோமபாலாவுக்கு சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாலேயே இவ்விருவரும் கொழும்பு செல்வதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

கொழும்பு செல்லும் இவர்கள் அங்கு தமது பிள்ளையின் விடுதலை தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாகத் தெரிவித்தனர்.

(உ-3)

### கைதிகள் விடுவிப்பு குறித்து

## அரச அதிபர் கொழும்பில் தொடர்ந்து பேச்சு நடத்துவார்

யாழ்ப்பாணம், ஆக 9

நாளை கொழும்பு செல்லும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், யுத்தக் கைதிகளின் விடுவிப்பு தொடர்பாக ஸ்ரீலங்கா அரச அதிகாரிகளுடன் கொழும்பில் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவார் என்றும் 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

(உ-3)

## நல்லெண்ணத்தைக் காட்ட கைதிகளை விடுவிக்குக!

### ஹமில்டன் கோரிக்கை

''உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளை விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும்.''

—கூட்டுப்படைகள் தலைகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இவ்வாறு தெரிவித்தார் என்று ''சண்டே ஒப்சேர்வர்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

தங்களை ஒரு விடுதலை இயக்கம் என்று கூறிக்கொள்ளும் விடுதலைப் புலிகள் இதனைச் செய்ய முன்வர வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

(உ-எ)

## மோதல் சம்பவங்களில் கனடா தமிழ் மாணவர்கள்

கொழும்பு, ஆக. 9

கனடாவில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வன்முறைகள் இடம்பெற்றுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழ் மாணவர்களுக்கும் வெள்ளை இன மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல் சம்பவங்களும் இவற்றில் அடங்குகின்றன.

சமீபத்தில் ஸ்கார்பரோ மிட்லண்ட் பாடசாலையில் 15 வயதான வெள்ளை இன மாணவன் ஒருவனை இரண்டு வாகனங்களில் வந்த தமிழ் இளைஞர்கள் கத்திகள், வாள்கள் போன்ற ஆயுதங்களுடன் துரத்திய போது அந்த மாணவன் தப்பிச் சென்று விட்டான்.

அதற்குச் சில வாரங்களுக்கு முன்னால் தமிழ் மாணவன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஹெரோயின் கடத்தலை விசாரிக்க

## இந்தியப் புலனாய்வாளர்கள் இலங்கைக்கு விஜயம்!

கொழும்பு, ஆக. 9

3 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான 38 கிலோ ஹெரோயின் போதைவஸ்துவைக் கடத்திய சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த இந்திய சுங்கத் திணைக்களத்தின் புலன் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த இரண்டு துப்பறியும் நிபுணர்கள் அண்மையில் கொழும்புக்கு வந்தனர்.

இந்தியாவில் இருந்து கொழும்புக்குப் பயணமாகவிருந்த இலங்கைப் பிரஜை ஒருவரிடமிருந்து இப்போதைவஸ்துவை இந்திய அதிகாரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத் திட்டத்துக்கு கொழும்பில் முக்கியத்துவம்

கொழும்பு, ஆக. 9

உலக ஒத்துழைப்புக்கான அமைப்பின் சார்பில் நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்களும் கையொப்பமிட்டு ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கையளித்த சமாதானத் திட்டத்தை நேற்றைய கொழும்பு ஞாயிறு பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

அரச சார்பு பத்திரிகைகளான ''சண்டே ஒப்சேவரிலும், ஞாயிறு தினகரனிலும் நான்கு அறிஞர்களின் படங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை சாம்பல்தீவில் 6 பொலீஸார் உயிரிழப்பு!

### ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 9

திருகோணமலை சாம்பல்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.15 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு பொலிஸார் உயிரிழந்தனர். அவர்களின் ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

திருகோணமலை நகரில் இருந்து சுமார் 5 மைல் தொலைவில் உள்ள சாம்பல்தீவில்—மாங்கனாய் பொலீஸ் நிலையத்தில் இருந்து சுமார் 500 யார் தூரத்தில்—அமைக்கப்பட்டிருந்த பாலத்தடி பொலீஸ் காவலரணுக்கு காவல் கடமைக்கு சென்ற பொலீஸார் மீதே இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் அந்த இடத்திலேயே ஆறு பொலீஸார் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

பொலீஸாரிடம் இருந்த ரி 56 ரக துப்பாக்கிகள், அதற்குரிய மகஸின்கள், நடுத்தர ரவைகள், ஜே. ஆர். ரக கைக்குண்டுகள், ஏ. கே. ஹோல்ஸர்கள், சிறிய வானொலிப் பெட்டி ஆகிய ஆயுதங்களையும் மற்றும் ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

(உ-3)

## 3 தமிழ்ப் பெண்கள் சாம்பல்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஆக. 9

கடந்த வியாழனன்று நண்பகல் திருகோணமலை சாம்பல்தீவில் வைத்து ஆசிரியை ஒருவர் உட்பட மூன்று தமிழ்ப் பெண்களை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து வெள்ளை நிற வான் ஒன்றில் ஏற்றிச் சென்றனர்.

சாம்பல்தீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயான இராமநாதன் பிள்ளைராணி, 5 பிள்ளைகளின் தாயான வில்வராஜா சூரியகலா ஆகியோரையும், அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த ஆசிரியையான நாகராசா கோணேஸ்வரி (31 வயது) என்பவரையுமே அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

### இந்து மத தீவிர அமைப்பின்

## சென்னை அலுவலகத்தில் குண்டு வெடித்து 9பேர் பலி!

சென்னை, ஆக. 9

இந்து மத தீவிர அமைப்பான ராஷ்ட்ரீய சுயம் சேவக் (ஆர்.எஸ்.எஸ்.) அமைப்பின் சென்னைத் தலைமை அலுவலகத்தில் [illegible] நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

அப்போது இரு பெண்கள் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்தனர். பலத்த காயங்களுக்குள்ளான 5 பேர் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்டடத்தின் பெரும் பகுதி தகர்ந்தது.

குண்டு வெடித்த போது அந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் நூலகத்தில் தங்கியிருந்தவர்களே உயிரிழந்ததுடன் காயமுமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

மூன்று மாத கைலைன் கறுப்புக்கோழிகளும், இரண்டு மாத ஊர்க்குஞ்சுகளும், பாமாஸ் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. இல. 70/6, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (26863)

### FOR SALE

Safeguard Voltage Stabiliser, one Thousand Watts, as New 281, Kandy Road, Jaffna. (26849)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்குக்கு அண்மையில் தங்கச் சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப்பெறவும். தொடர்பு: 212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (26865)

### வாங்குகிறோம்

கோழித்தீன் வெற்றுப்பைகள் வாங்குகிறோம். தொடர்பு: மிக்வைற். (சி-5574)

### CLEARANCE SALE

இந்திய சஞ்சிகைகள், மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி-5528)

### வாங்கப்படும்

நன்றாகக் காய்ந்த எலுமிச்சம்கோது (பூஞ்சணம் பிடிக்காதது) கிலோ 50/-ரூபாவுக்கு வாங்கப்படும். கந்தசாமி அன் சன்ஸ், இல. 15, ஆடியபாதம் வீதி, நல்லூர். (26774)

### மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 6-8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

### யாருடையது?

பெண்கள் பாவிக்கும் கைக்கடிகாரம் ஒன்று கே. கே. எஸ். வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். கே. எஸ். ஆர். போட்டோஸ், இல.766, கே. கே. எஸ். வீதி, தட்டாதெருச் சந்தி. (26862)

### தவறிவிட்டது

ஆறுமுகம் ராகினியின் 697141138V இலக்க அடையாள அட்டை 30-7-93 அன்று மல்லாகத்திற்கும், தாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் மு. கோபாலகிருஷ்ணன், முனாமலை, மானிப்பாய் அல்லது திருமகள் புடைவை அகம், இல. 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (26868)


## இன்று

ஜனசவிய திட்டத்தின் கீழ் கிடுகு பின்னும் நிலையம் ஒன்று. இன்று திங்கட் கிழமை பளை வண்ணான் கேணியில் கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் அதிகாரியினால் ஆரம்பித்து வைக்கப்படும். (த-117)

o o o

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் 42ஆவது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி இல்லங்களுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டி இன்று திங்கள் பிற்பகல் 1-30 மணி முதல் நிலைய மைதானத்தில் இடம்பெறும். (த-100)

## தையல் பயிற்சி

உடுவில், ஆக. 9

இராணுவ வன்முறைகளால் தமது நிரந்தர வதிவிடங்களை விட்டு இடம்பெயர்ந்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள முகாம்களில் தங்கி வாழும் ஐம்பது யுவதிகளுக்கு தேசிய சர்வோதய இயக்கத்தின் மருதனார்மட கிளையினர் இலவச தையல் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர். (த-152)


# "நல்லைக் குமரன் மலர்"

வெளிவந்துவிட்டது

**164 பக்கம் - விலை ரூபா 125/-**

கிடைக்குமிடங்கள்:-

* நல்லூர் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள மாநகரசபை செயலகங்கள், கண்காட்சிக் கூடங்கள்.
* 228, பிரதான வீதியிலுள்ள புற்றுநோய் சங்கப் பணிமனை.
* கச்சேரியடியில் உள்ள சுகாதாரப் பணிமனை.

சைவசமய விவகாரக் குழு,
யாழ். மாநகராட்சி மன்றம்.

(சி-5576)


# நன்றி நவில்கிறோம்

07-08-93 மாலை நடந்தேறிய எமது கலை நிகழ்ச்சிக்கு நிதியுதவிகள் புரிந்தும், பத்திரிகை விளம்பரங்கள் கொடுத்தும், உரையாற்றியும், தங்கப்பதக்கங்கள் கொடுத்தும் எமது கலை நிகழ்ச்சியை சிறப்பித்தவர்களாகிய சகல வர்த்தக ஸ்தாபனங்கள், சங்கங்கள், சமாசம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை, தொழிற்துறை, காவல்துறை, கலை பண்பாட்டுக்கழகம் ஆகியோருக்கும், தொண்டர்படை (ஊர்காவற்துறை பிரிவு), யாழ். மாநகரசபை ஆணையாளர், மேக்கன்னரல் பாதுகாப்புச் சேவை, சகல இசைக்கலைஞர்கள் எல்லோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை சங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

\- யாழ். வர்த்தகர் சங்கம்

21, நவீனசந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம். (26872)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 29 | 09 |
| — | — |
| 10 | 08 |
| — | — |
| 1958 | 1989 |

அமரர்

## டாக்டர் (செல்வி) கலா சிங்கநாயகம்

(B.S.M.S. யாழ். பல்கலைக்கழகம், கைதடி.)

ஆண்டு நான்கு ஆனதம்மா!
ஆருயிரே எமைப் பிரிந்து
மீண்டும் உமை எப்போது
மேதினியிலே காண்பதுவோ,
நீண்ட தூரம் போய் எமக்கு
நீள் துயரம் தந்தாயே,
யாண்டும் எம் நெஞ்சத்து
உன் பாதம் பதித் தோமே
எம் துயரம் மாறாதம்மா
எங்கள் கண்ணீர் ஓயாதம்மா!
சாந்தி! சாந்தி! ஓம் சாந்தி!

தங்கள் பிரிவால் வாடும்:
தாய், சகோதரர்கள்.

வசாவிளான். (26812)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 12 | 02 |
| — | — |
| 07 | 08 |
| — | — |
| 1930 | 1991 |

## அமரர் செல்லையா சிவரத்தினம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

திதி: 09 - 08 - 1993

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், எம்மைப் பாதுகாத்து ஆனாக்கி ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு, பிரிந்த குலதெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்கள்.

நிலவுகலட்டி,
இடைக்காடு. (26820)

தமிழ் மக்களின்

# 75 கோடி ரூபா சொத்துக்கள் மட்டக்களப்பில் நாசம்

1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பின் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 75 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டிருப்பதாக புள்ளி விவர அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பகுதியிலேயே பெருமளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இங்கு 25 கோடி ரூபா பெறுமதியான தமிழரின் சொத்துக்களும் —

வாழைச்சேனை பிரிவில் 15 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் — போரதீவு பிரதேசத்தில் 7 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் —

மண்முனைப் பிரதேசத்தில் 18 கோடி ரூபா சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

80 ஆயிரத்து 397 ஏக்கர் நெற்காணிகளும்—

34 ஆயிரத்து 812 ஏக்கர் மேட்டுநிலக் காணிகளும் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன.

4½ கோடி ரூபா பெறுமதியான 3 ஆயிரத்துப் 12 படகுகள் அழிக்கப்பட்டுள்ளன. 55 ஆயிரத்து 42 வீடுகள் அங்கு உடைக்கப்பட்டுள்ளன — இவ்வாறு மதிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# ஐஸ்கிறீம் தயாரிப்பது தொடர்பாக அறிவுறுத்து

குடாநாட்டில் தயாரித்து விற்பனை செய்யப்படும் ஐஸ்கிறீம் வகைகளில் தீங்கினை விளைவிக்கக்கூடிய பல பொருள்கள் உள்ளடக்கியிருப்பது அவதானிக்கப்பட்டதை அடுத்து—

இத்தகைய நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காகவும்— இதுவிடயமாக ஆலோசனைகளை வழங்கவும் ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் அறிவுறுத்தப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

★ ஐஸ்கிறீம் தயாரிப்பில் 'சக்கரின்' பாவனை முற்றாகத் தடைசெய்தல்.

★ காலாவதியான பால்மா, தடைசெய்யப்பட்ட சாயங்கள் முதலியன பயன்படுத்தப்படக் கூடாது.

★ ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையங்கள் சுகாதாரச் சட்டங்களுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

இத்தகைய நடைமுறைகளை சகல ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களும் உடனடியாக அமுலுக்கு கொண்டுவர வேண்டும் என்றும்— இவற்றை மீறுவோர் மீது தமிழீழ காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பர் எனவும் கலந்துரையாடலின் முடிவில் தெரிவிக்கப்பட்டது. (த-5)

தாண்டிக்குளம் ஊடாக

# வீடியோப் படப் பிரதிகள் எடுத்து வருவதற்கும் தடை

யாழ்ப்பாணம், ஆக. 9

தாண்டிக்குளம் சோதனை முகாம் ஊடாக வீடியோ திரைப்படப் பிரதிகளை எடுத்து வர ராணுவத்தினர் தடைவிதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் இந்தியத் திரைப்பட வீடியோ பிரதிகளை தாண்டிக்குளம் ஊடாக எடுத்து வர ராணுவத்தினர் அனுமதித்திருந்தனர். ஆனால் கடந்த சில நாட்களாக தாண்டிக்குளம் முகாமில் ராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதை அடுத்து வீடியோ படப் பிரதிகள் அனைத்தும் திருப்பி அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை முன்னர் தடை செய்யப்பட்ட சில பொருள்கள் எடுத்து வரப்படும் போது கண்டும் காணாமல் இருந்த ராணுவத்தினர் தற்போது இவ்விடயத்தில் கடும்போக்கை கடைப்பிடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# செய்திக் கொத்து

### மண்எண்ணெய் வழங்கல்

வலிகாமம் மேற்கிலுள்ள 7 புதிய குழாய்க் கிணறுகளை இறைத்து சுத்தம் செய்வதற்கு பிரதேச சபை தலா 2 லீற்றர் மண்எண்ணெய் வழங்கவுள்ளது. (க-161)

### படிக்க மின்சார வசதி

யாழ். புனித பத்திரிசிரியார் கல்லூரியில், தற்போது நடைபெற்றுவரும் ஜி. சி. ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இரவு வேளையில் படிப்பதற்கு வசதியாக மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (க-173)

### நெருப்புக்காய்ச்சல்

நெல்லியடி, ஆக. 9

திக்கம், பொலிகண்டி ஆகிய இடங்களில் நெருப்புக்காய்ச்சல் அதிகம் பரவுவதால் ஊரணி வைத்தியசாலையில் நோயாளிகள் வருகை அதிகரித்துள்ளது. (க-109)

### குழாய்க் கிணறுகள்

தென்மராட்சி, ஆக. 9

முகமாலை சமுத்திரன் குடியிருப்பில் இரண்டு குழாய்க் கிணறுகளை தென்மராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், இயக்கச்சி வை. எம். சி. ஏ. கழகத்தினரும் அமைக்கவுள்ளனர். (க-117)

### தையல் பயிற்சி

தாளையடி, ஆக. 9

வடமராட்சி கிழக்கில் மாமுனை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தால் தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-144)

### விதவைகளுக்கு கடன்

தாளையடி, ஆக. 9

''போருட்'' நிறுவனம் விதவைகளுக்கு, தொழில் முயற்சி ஊக்குவிப்புக்காக வட்டியில்லாத கடனை வழங்கி வருகின்றது. வடமராட்சிக் கிழக்கிலும் இதன் மூலம் பல விதவைகள் பயனடையவுள்ளார்கள். (க-144)

### மருதங்கேணியில் வங்கிச் சேவை

தாளையடி, ஆக. 9

பருத்தித்துறை இலங்கை வங்கி நடமாடும் வங்கிச் சேவையை மருதங்கேணியில் ஆரம்பித்துள்ளது. மாதத்தின் மூன்றாவது புதன் கிழமைகளில் மருதங்கேணியிலுள்ள பிரதேச செயலர் பணிமனையில் இவ்வங்கிச் சேவை நடைபெற்று வருகின்றது. (க-144)

### வீடுகள் வழங்கல்

தென்மராட்சி, ஆக. 9

தென்மராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சியில் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு நாவற்குளி, நுணாவில் பகுதிகளில் வீடுகளை அமைத்து வழங்கி வருகின்றனர். (க-117)

### பங்குத்தந்தை

தாளையடி பங்குத்தந்தை அருட்திரு எம். டேவிற் பாலையூர் பங்குத்தந்தையாகவும், வலைப்பாடு பங்குத்தந்தை அருட்திரு சேவியர் கருணாரட்னம் தாளையடி பங்குத் தந்தையாகவும் இடமாற்றமாகியுள்ளனர். (க-144)

### போசாக்குணவு

தென்மராட்சி, ஆக. 9

தென்மராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தென்மராட்சிப் பகுதியிலுள்ள எட்டு பாலர் பாடசாலைகளின் சிறார்களுக்கு போசாக்கு உணவுகளை வழங்கி வருகின்றனர். (க-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## சமூக நிலையை வீழ்த்தும் சதி

மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைக் கிராமங்களில் வாழும், தொழில்புரியும் தமிழ் டாக்டர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவ்வாறு கடத்திச் செல்லப்படுவோர் காணாமற்போய் விடுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா அரசின் உடந்தையுடன் முப்படைகளும் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டிருக்கும் இன அழிப்புத் திட்டத்தின், செயற்பாட்டின் புதியதோர் அங்கம் இதுவாகும்.

எறிகணை வீச்சு, குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு, பீரங்கித் தாக்கு ஆகியவற்றினால் தமிழர்களை அரச படைகள் அழித்து வருவது கேட்பாரின்றி நடந்து வருகிறது. இவற்றுக்கு மேலதிகமாக தமிழர்களைக் கண்டபடி கைது செய்வதும், காவலில் வைப்பதும், கொடூரமான சித்திரவதைகளின் பின்னர் விடுவிப்பதும் படையினர் மேலதிக பணம் தேடும் தொழிலாகிவிட்டது.

படையினர் தாக்கப்பட்டு உயிரிழக்கும் வேளைகளில் அவற்றுக்குப் பழிவாங்குவதன் பொருட்டு படையினர் நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களை சுட்டும், வெட்டியும், குத்தியும், எரித்தும் அழிப்பது சாதாரண நிகழ்வுகளாகி விட்டன.

இவை எல்லாவற்றுக்கும் புறம்பாக இராணுவ அடக்குமுறையின் கீழ் உள்ள தமிழ்ப் பகுதிகளில் — வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில்— படையினரால் கைது செய்யப்படும்— கூட்டிச் செல்லப்படும் தமிழர்களைக் காணாமற்போனவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டியதாக உள்ளது. அந்த வகையில் தமிழர்களில் முக்கிய பதவிகளில் உள்ளவர்களை, சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களை இனங்கண்டு, கடத்திச் செல்லும் புதிய அக்கிரமம் இனப்படுகொலையுடன் வேறு உள்நோக்கமும் கொண்டதாகும்.

அதுவும் எல்லைப்புறங்களில் உள்ள தமிழ்ப் புத்திஜீவிகளை கடத்திச் செல்வது, அரசு அப்பகுதிகளில் நடத்தி வரும் சிங்களக் குடியேற்றங்களுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். தமிழ் மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் அரசு நடத்தும் திட்டமிட்ட குடியேற்றங்கள் குறித்து தமிழ்ப் புத்திஜீவிகள் தகவல் அறியக்கூடும் என்றும், அதன் மூலம் சிங்களக் குடியேற்றத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் குந்தகம் ஏற்படலாம் என்றும் அச்சம் கொண்டார்களோ...? அல்லது அவர்கள் மூலம் எல்லைப்புறப் பகுதிகளில் படையினரின் நடவடிக்கைகள், நடமாட்டங்கள் குறித்து இரகசியங்கள் வெளியே போகலாம் என்று நினைத்தார்களோ ?

எதுவானாலும், தமிழ்ப்புத்திஜீவிகளை தேர்ந்தெடுத்து— பிரித்து இனங்கண்டு — அவர்களை அழிக்கும் இராணுவத் திட்டம் மிகவும் பயங்கரமானது. இது சாதாரண இன அழிப்புகளைவிட கூடிய பரிமாணம் கொண்டதாகும். இப்போது எல்லைக் கிராமங்களில் உள்ள டாக்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்களில் ஆரம்பமாகி தமிழரில் எல்லா வகைப் புத்திஜீவிகளையும் தேடி அழிக்கும் பேராபத்தான கட்டத்தை அடையலாம். தமிழர் சமுதாயத்தின் உயிர்ப்பையும், துடிப்பையும் சிதைத்துவிடும் நாசகாரச் சதி நடவடிக்கையாக மாறலாம்.

தமிழர்களைப் பலவீனப்படுத்துவதற்காக, அவர்களின் போராட்ட வலுவையும், உணர்வையும் நலிவுறச் செய்வதற்காக, அரசு இப்போது இராணுவ நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை விதித்துள்ளது. அவற்றைப் போன்று, புத்திஜீவிகளை கொன்றொழித்து சமூக நிலை வீழ்ச்சியை உண்டாக்கும் நோக்குடன் அரசு இத்தகைய நாச வேலையை இராணுவத்தினர் ஊடாகச் செயற்படுத்துகிறது.

இந்தப்பேராபத்தைத் தவிர்ப்பதற்கு, தடுப்பதற்கு, இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் பகுதிகளை விரைந்து மீட்பதே ஒரே வழி.

இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வு

# ஜேர்மன் உதவி திட்டத்தின் கீழ் முதற்கட்ட வேலை ஆரம்பம்

## அரச சார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 9

ஜேர்மன் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 7 8 கோடி ரூபா உதவிக்கான செயல் திட்டங்கள் — யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் அமைப்புகளினால் இவ்வாண்டு ஜூன் மாதம் முதல் அடுத்த ஆண்டு மே மாதம் வரை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதற்கென முதற்கட்டமாக வழங்கப்பட்ட 3 கோடி ரூபாவைக் கொண்டு இத்திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்தோர் முகாம்களின் பராமரிப்பிற்காக பின்வரும் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

2 ஆயிரத்து 600 புதிய குடிசைகள் அமைத்தல், 2 ஆயிரத்து 200 குடிசைகள் திருத்தல், 11 பொது மண்டபங்கள், 850 மலசல கூடங்கள், 45 நிறந்த கிணறுகள் அமைத்தல் —

குடிதண்ணீர் விநியோகத்திற்காக 128 நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் 190 தண்ணீர் தொட்டிகள் வழங்கல், ஆயிரம் குடும்பங்களுக்கு அன்றாட அத்தியாவசியமான வீட்டுப் பாவனைப் பொருள் வழங்கல் மற்றும் முகாம்களில் உள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய பயிற்சி வகுப்புக்களை நடத்துதல். (த-162)

யாழ். ஆஸ்பத்திரியில்

## கடந்த மாதத்தில் மட்டும் 27 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

அரியாலை, ஆக. 9

யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 27 ஆயிரத்து 157 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்திய சாலை புள்ளி விவரங்களில் இருந்து தெரிய வந்தது.

அதிகமானோர் நெருப்புக் காய்ச்சல் மற்றும் சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை — கடந்த மாதம் சுமார் 4 ஆயிரத்து 500 பேர் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றனர்.

இணையப் பிரதிநிதிகளால்

## போசாக்கு நிலைவரம் பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 9

யாழ். மாவட்டத்தில் மக்களின் போசாக்கு நிலைவரம் மற்றும் உழைப்பாளரை இழந்த பெண்கள் பற்றிய மதிப்பீடு அடங்கிய ஆய்வு அறிக்கைகள் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளால் கொழும்பில் உள்ள இணைய நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் இங்கிருந்து கொழும்பு சென்ற யாழ். இணையப் பிரதிநிதிகள் அவற்றை அங்கு கையளித்ததுடன் அது பற்றி அங்குள்ள அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறினர்.

போசாக்கு நிலைவரம் பற்றிய ஆய்வு அறிக்கை யாழ். மாவட்டம் முழுவதிலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் உழைப்பாளரை இழந்த குடும்ப பெண்களுக்கான ஆய்வுப் பட்டறைகளின் தொகுப்பும் இங்கு தயாரிக்கப்பட்டிருந்தது. அவற்றையே இணையப்பிரதிநிதிகள் அங்கு கையளித்தனர்.

கையளிக்கப்பட்ட மேற்படி ஆய்வு அறிக்கைகளின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வுப் பணிகளுக்கான திட்டங்களுக்கு உதவி வழங்குமாறு கொழும்பில் உள்ள இணையப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-162-5)

## சட்டத்தரணிகள் பதிவு

யாழ்ப்பாணம், ஆக. 9

தமிழீழ நீதிமன்றங்களில் சட்டத்தொழில் புரிவதற்கு பதிவு செய்து கொள்வதற்காக விரும்பும் சட்டத்தரணிகள் அனைவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலில் நடுவப் பணியகத்தில் தவறாது சமூகமளிக்கும்படி விடுதலைப் புலிகளின் தமிழீழ நீதி நிர்வாகத்துறை பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (த)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் திரு. எஸ். குமாரசாமியின் இன்னிசை மாலை 6மணி முதல்

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15 — 6-15 ''அஞ்ஞான வாசம்'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் —

பிற்பகல் 2—3 மணி வரை ''கெடுவாய் மனனே'' எனும் பொருளில் திரு. சிவமகாலிங்கம் சமயச் சொற்பொழிவு

மாலை 5-30 — 6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந சிவசண்முகமூர்த்தி ''சூராதி சூரன்'' எனும் பொருளில் கந்தபுராண இசைப்பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3 00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(க-111-126)

## அதிக நீர்ப் பாய்ச்சல் அழிவுக்கு வழி காட்டல்

## ஆலயங்களில்

பருத்தித்துறை மருதடி ஸ்ரீ ஞானவைரவர் கோவிலில் நாளை செவ்வாய்க்கிழமை இலட்சார்ச்சனையும், ஹோமமும் நடைபெறும்.

[க-173]

## அலுவலகம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 9

மூத்திரைச்சந்தியில் இயங்கி வந்த — போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் — அலுவலர்கள் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான பயண அனுமதி வழங்கும் செயலகம் இன்று முதல் யாழ். மத்திய பஸ்நிலையத்துக்கு அருகில் இயங்கவிருக்கிறது.

பயண அனுமதி பெறவரும் அலுவலர்களின் வசதி கருதியும், நன்மை கருதியும் அருச்சுனா வீதியில் உள்ள யாழ் மத்திய பஸ் நிலையத்துக்கு இந்த அலுவலகம் இடமாற்றம் செய்யப்படுவதாக போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(உ-3)

## இந்திய-இலங்கை டெஸ்ட்: முரளீதரன் சிறப்பு ஆட்டம்

கொழும்பு, ஆக. 9

இலங்கை, இந்திய அணிகளுக்கு இடையேயான மூன்றாவது — இறுதி — டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான நேற்று ஆட்ட நேர இறுதியின் போது இலங்கை தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

முன்னதாக 5 விக்கட் இழப்புக்கு 384 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் இந்திய அணி நேற்றுக் காலை தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடியது.

இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரனின் அற்புதமான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமள என விக்கெட்டுக்களை இழந்து உணவு இடைவேளைக்குச் சற்று முன் 446 ஓட்டங்களுடன் இந்தியா ஆட்டமிழந்தது. முரளீதரன் நான்கு விக்கட்டுகளை வீழ்த்தினார்.

அஸாருதீன் 50 ஓட்டங்களும் கபில்தேவ் 27 ஓட்டங்களும் எடுத்தனர்.

இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 351 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## சித்த மருத்துவ மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஆக 9

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப்பிரிவை தனிப் பீடமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சித்த மருத்துவ பிரிவு மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை முதல் வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர்.

தமது கோரிக்கை தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க தவறுமாயின் போராட்டத்தை தாங்கள் விஸ்தரிக்கவிருப்பதாக மாணவர் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

(உ-3)

## பழைய உணவு சாப்பிட்டவர்கள் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம், ஆக. 9

முதல் நாள் இரவு சமைத்த பழைய உணவை உட்கொண்ட 11 பேர் வாந்தி மற்றும் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டு சோர்வுற்ற நிலையில், யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டனர்.

திவகப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் அகதி முகாமில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (உ-13-15)

# கூட்டுறவு வளர்ச்சியில் நாட்டில் முன்னணி வகிப்பது யாழ்.மாவட்டமே

## கூட்டுறவு தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 9

இலங்கையிலேயே யாழ். மாவட்டம் தான் அன்றும் இன்றும் கூட்டுறவு வளர்ச்சியில் முன்னணி வகிக்கின்றது. கூட்டுறவு வளர்ச்சியின் அம்சங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள், நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதில் இருந்து இது தெளிவாகின்றது.

சர்வதேச கூட்டுறவு தினத்தை ஒட்டி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் அண்மையில் நடத்தப்பட்ட விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போது யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. த. வைத்திலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தொடர்ந்து பேசும் போது அவர் கூறியதாவது;

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்துள்ளபோதிலும் கூட்டுறவு பணியாளர்களின் நிலை வளர்ச்சி அடையவில்லை. கூட்டுறவுப் பணியாளர்களின் தரத்தை உயர்த்தவும், சம்பளத்தை அதிகரிக்கவும் இத்துறையைச் சார்ந்தவர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி தனதுரையில்; இன்றைய போராட்ட காலத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் எமது மக்களின் பட்டினிச் சாவைத் தவிர்த்துக் கொள்வதில் தம்மாலான பங்களிப்பைச் செய்வதை யாவரும் அறிவர். தமிழீழத்தின் வலுவான பொருளாதார அமைப்பொன்றை கட்டி எழுப்புவதற்கு கூட்டுறவுத்துறையினர் பங்காற்ற வேண்டும் என்றார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். லிங்கநாதன், பனை - தென்னை அபிவிருத்தி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் உட்பட பலர் உரையாற்றினர். இதனைத் தொடர்ந்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

(த-162)

நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

## திருவருள் புரிவாய்!

பல்லவி

நல்லையில் பதியுறை ஞானபண்டிதா - உன்
வல்லமை நம்பினோம் வழிசெய்குவாய்

(நல்)

அனுபல்லவி

எல்லை யில்லாத எழிலுன் பதியாம்
எழிலொரு அருளுறை திருவடி வேலா
தொல்லைகள் நிறைந்த சூழல் நீக்கி
எல்லை யில்லா இன்பமெமக் கருளுவாய்

(நல்)

சரணம்

எல்லையில் எதிரிகள் எறிகணை யுடனே
ஏவலில் படையினர் எம்மின மழிப்பில்
செல்படு செவ்வேல் திருக்கரம் நம்பி
சேவிக்க வந்தேன் திருவருள் புரிவாய்

(நல்)

— நா. தாட்சாயனி.

[நேற்றைய இதழில் வெளியான ''எங்கள் துயர் தீராயோ'' என்ற கவிதையை எழுதியவர்: காரைநகர் ஆ. சடாட்சரம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நினைவாக ஜேர்மனில் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஆக. 9

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட மாவீரர்களை நினைவு கூருமுகமாக— மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான — மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் ஜேர்மனியில் நடைபெறவுள்ளன.

தமிழ் மாணவர் அமைப்பின் ஜேர்மன் கிளையினரால் இவ் விளையாட்டு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஜேர்மனியில் உள்ள தமிழ் மக்களிடையே விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதும் இப் போட்டிகளின் நோக்கம் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முதல் நிகழ்ச்சியாக கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர் வரும் 14 ஆம் திகதி காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை ஜேர்மனியின் முன்சென் கிளாட்பாச் நகரில் உள்ள ஸ்போட்ஸ் ஹோல் மைதானத்தில் நடைபெறும்.

எதிர் வரும் 21 ஆம் திகதி உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும்.

இறுதிப் போட்டிகள் எதிர் வரும் 28 ஆம் திகதி இடம் பெறும். அன்றைய தினம் மெய்வல்லுநர் போட்டிகள், அணிவகுப்பு, விநோத உடைப் போட்டி ஆகியனவும் நடைபெறும். [உ-3]

## இளைஞரின் சடலம் மீட்பு

ஏழாலை வடக்கு தோட்ட வெளியில் காணப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் வலி. வடக்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைத் தொண்டர்களினால் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 38 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் வலது கை மணிக்கட்டுவரை துண்டிக்கப்பட்டுள்ளது. (உ-13)

## இளாலிக் கடல் சம்பவம்:

# படகோட்டிகள் நால்வர் பலாலியில் தடுத்து வைப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 9

இளாலிக் கடலில் கடந்த மாதம் 29 ஆம் திகதி கடற்படையினர் நடத்திய கொலை வெறியாட்டத்தின் போது தாக்குதலுக்கு உள்ளான இரண்டு படகுகளின் ஓட்டிகளும் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரும் இப்பொழுது பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாக அவர்களின் உறவினர்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைவிட, கடற்படையினர் பிடித்துச் சென்ற மற்றும் மூவரும் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப்போது பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகோட்டிகளின் பெயர் விவரம் வருமாறு:-

★ மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்தியாப்பிள்ளை சவுந்தரநாதன் [றோபேட் வயது 26]. இவர் குருநகரில் வசித்து வந்தவர்.

★ செல்லத்தம்பி நேசன் (வயது 20).

★ ஆரோக்கியநாதர் இன்பம் (வயது 20). இவர்கள் மடு அகதிகள் முகாமில் தங்கி இருந்தவர்கள்.

★ சிறில் சூரி (வயது 25) இவர் குருநகர் வாசி. (அ-51)

## சென்னை --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வெடிப்பால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகளுக்குள் மேலும் பலரின் சடலங்கள் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பிரதமர் நரசிம்மராவ், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி ஆகியோர் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். [உ-எ-9]

## இந்தியப்- -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் கைப்பற்றினர்.

கொழும்பு வந்த இந்திய துப்பறியும் நிபுணர்கள், இக் கடத்தல் சம்பவம் தொடர்பாக இலங்கை வர்த்தகர் ஒருவரையும் வேறு இருவரையும் விசாரித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது (த-எ)

## ஐ.நா.மத்தியஸ்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ.நா. மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலியைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

★ இலங்கையில் சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்பட்டு, சமஷ்டி அரசு உண்டாக்கப்பட வேண்டும்.

★ விடுதலைப் புலிகளும், ஸ்ரீலங்கா அரசாங்கமும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும். பொதுவான, சண்டையில்லாத பிரதேசங்களை ஏற்படுத்தி, யுத்த நிறுத்தத்தை ஐ. நா. மேற்பார்வை செய்ய வேண்டும்.

★ ஐ. நா. மேற்பார்வையில் வடக்கு - கிழக்கில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

இந்தத் திட்டம் ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவிடமும், பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்காவிடமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தை கொழும்புப் பத்திரிகைகள் நேற்று வெளியிட்டன.

சமாதானத் திட்டம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானது என்றும், ஸ்ரீலங்காவுக்கு ஏற்புடையது அல்லவென்றும் கூறி அரசு அதனை நிராகரித்துவிட்டது.

இனப்பிரச்சினையில் வெளித் தலையீடு தேவையில்லை என்று கூறி, சமாதானத் திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா திட்டவட்டமாக நிராகரித்தார்.

அரசின் இந்த முடிவு புதிதல்ல. மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவும் இதுபோன்ற ஆலோசனையை நிராகரித்திருந்தார்.

புதிய ஜனாதிபதி விஜேதுங்காவும் பத்தாண்டு காலச் சண்டையை நிறுத்த ஐ.நாவின் தலையீடு தேவையில்லை என்று பத்திரிகையாளரிடம் கூறியிருந்தார் — என்று பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இலங்கையில் சமஷ்டி ஆட்சி ஏற்பட்டால் மட்டுமே தமிழர்களும், விடுதலைப் புலிகளும் வழிவழியாகத் தங்கள் தாயகம் என்று கருதிவரும் பகுதிகளில் அதிக தன்னாட்சி வேண்டும் என்ற கோரிக்கை பூர்த்தியாகும் என்றும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் இப்போது தான் வெளியாகி உள்ளது.

## மோதல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒருவன் கார்பரோ வின்சன்ட் சேர்ச்சில் பாடசாலை தரிப்பிடத்தில் வைத்து வெள்ளை இன மாணவர்களினால் தாக்கப்பட்டதாகவும் —

அதே தினத்தன்று மாலையில் பாடசாலைக்கு வந்த தமிழ் மாணவர்கள் வெள்ளை இன மாணவர்களைத் தாக்கியதாகவும் பொலீஸில் முறையிடப்பட்டிருக்கிறது.

மேற்படி சம்பவங்கள் குறித்து கனேடிய பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை —

இனவாதத்துக்கு எதிராகச் செயல்படுவதாகக் கூறிக் கொள்ளும் இலங்கைத் தமிழ் அமைப்புக்களுக்கு இடையே போட்டி பூசல்கள் மலிந்து உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் கனேடிய தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு என்ற பெயரில் செயல்பட [illegible] களுக்கு இடையேயான போட்டிகள் [illegible] வெளிப்படத் தொடங்கியுள்ளன.

# ஆச்சரியப்பட வைக்கும் பல நியமனங்கள் விரைவில்!

## அமைச்சர் ஹேரத் கூறுகிறார்

இன்னும் பல ஆச்சரியம் தரும் நியமனங்களை விரைவில் எதிர்பார்க்கலாம்.

அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் உடுகம்பொல துறைமுக அதிகார சபையின் உப தலைவராக நியமிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் திரு. ஹேரத் முன்கண்டவாறு கூறினார்.

அப்பதவிக்குத் தேவையான தகுதிகள் எல்லாம் உடுகம்பொலவுக்கு இருந்த காரணத்தினால் தான் அவரை அப்பதவிக்கு துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நியமித்தார் என்றும் அவர் கூறினார்.

உடுகம்பொல நியமனம் ஆச்சரியப்பட வைத்தது என்று செய்தியாளர் சுட்டிக் காட்டியபோது —

''ஆச்சரியப்படும் விஷயங்கள் நிறைய நடக்கின்றன'' என்று அமைச்சர் பதிலளித்தார்.

இன்னும் அப்படி நடக்கவுள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''பதற்றம் தரக்கூடிய பல விஷயங்கள் இன்னும் நடக்கவுள்ளன என்று பிரட்மன் வீரக்கோன் கூறுகின்றார். பொறுத்து இருந்து பாருங்கள்'' என்று திரு. ஹேரத் தெரிவித்தார். [உ-எ]

## புதிய உணவு அட்டைகள்

உடுவில் ஆக. 9

புதிய 'அ' 'உ' உலர் உணவு அட்டைகள் வலி-தெற்கு உடுவில் பிரதேச எல்லைக்குள் தற்போது விநியோகிக்கப் பட்டு வருகின்றன. இம்மாதம் 10 ஆம் திகதிக்கு பின்னர் புதிய உலர் உணவு அட்டைகளுக்கே பொருள்கள் வழங்கப்பட உள்ளன.

# பயிலுநர் ஆசிரியர்கள் அமைச்சருக்கு கோரிக்கை

கொழும்பு ஆக. 9

பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்கள், தங்களை பயிலுநர் என்று அழைக்கக்கூடாது என்று கல்வி அமைச்சுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட பயிலுநர் பட்டதாரி ஆசிரியர் சங்கம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

எதிர்காலத்தில் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் போது அவர்களை பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கக் கூடாது என்றும் இச்சங்கம் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. (த-எ)

## மிட்டாய்களில்

# 'சக்கறின்' பாவனை குறித்து எச்சரிக்கை

யாழ் குடாநாட்டில் மிட்டாய் தயாரிப்பில் சக்கறின் அதிகம் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சக்கறின் அதிகமுள்ள தின்பண்டங்களை நீண்ட காலம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சலரோக நோய், புற்று நோய் ஆகியவை தோன்றக் கூடிய வாய்ப்பு இருப்பதாக வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி பொ. இரத்தின சபாபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மிட்டாய்கள் தயாரிப்போர் சக்கறின் பாவித்து மிட்டாய்கள் செய்வதை தவிர்க்க வேண்டுமென வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியைச் சேர்ந்த உணவு சுகாதாரப் பரிசோதகர் அறிவுறுத்தியுள்ளார். (இ-162)

## மண்ணெண்ணெய் முகவர்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 9

கப்பல் மூலம் யாழ். மாவட்டத்துக்கு மண்ணெண்ணெய் கொண்டுவந்து மக்களுக்கு விநியோகம் செய்வது சம்பந்தமான நடைமுறைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

உத்தரவு பெற்ற எரிபொருள் வியாபாரிகள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (உ)

## பெண்களுக்கு தனியிடம்

அரியாலை, ஆக. 9

வில்லூன்றி தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடுவதற்கு பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் வில்லூன்றி பரிபாலனசபை பெண்களுக்கென தனியான பாதுகாப்பு வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

இதற்கமைய பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட தீர்த்தக் கேணிக்கென பெண் மேற்பார்வையாளர் ஒருவர் தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ளார். (த-17)

## கொப்பேகடுவ மறைந்து ஓராண்டு பூர்த்தி

அராலித்துறையில இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மற்றும் மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ன உட்பட பத்து சிரேஷ்ட படை அதிகாரிகள் கொல்லப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியடைந்தது. லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவுக்கு அஞ்சலி செலுத்தும் முழுப் பக்க விளம்பரங்கள் கொழும்புப் பத்திரிகைகள் பலவற்றில் நேற்று பிரசுரமாகியிருந்தன. (க-3-162)

## சந்தைப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் நெசவு உற்பத்தி புடைவைகளை சந்தைப்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதன் பொருட்டு சமாசத்தால் பெருமளவு உள்ளூர் நெசவு உற்பத்திப் புடைவை வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் இவற்றை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விநியோகிக்க சமாசம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-152)

## தட்டுப்பாடு நீங்கியது !

யாழ்ப்பாணம் ஆக. 9

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மயக்க மருந்திற்கு நிலவி வந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது. மேற்படி வைத்தியசாலைக்கு தேவையான மயக்க மருந்து வகைகள் தற்போது பருத்தித்துறைக்கு வந்துள்ள 'வாசுவ' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளதை அடுத்தே தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (த-162)

## சமாதானத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஐ. நா. செயலாளர் நாயகத்தின் படமும் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

சமாதானத்திட்டவிவரத்தையும் அரசு அதனை நிராகரித்ததையும் சர்வதேச செய்தி ஏஜன்சிகளும், வானொலிச் சேவைகளும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

ஜனாதிபதி விஜேதுங்கா சில நாட்களுக்கு முன்னர் மலேசிய செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில், இனப்பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச உதவியை நாடுவதாகக் கூறியதையும், இப்போது இந்தச் சமாதானத் திட்டத்தை நிராகரித்திருப்பதையும் செய்தி ஸ்தாபனங்கள் சுட்டிக் காட்டி இருந்தன. (அ-எ-த6)

# மரண அறிவித்தல்கள்

## Mr. T. F. C. CROFTON

(Retd. Irrigation Technical Assistant)

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட திரு. T. F. C. குறொவ்ரன் 08 - 08 - 1993 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் செல்லராஜம்மாவின் பாசமிகு கணவரும், திருமதி மா. விமலாதேவி (கொழும்பு), செல்வி கமலாதேவி, செல்வி நிர்மலாதேவி (அவுஸ்திரேலியா), நிர்மலகுமார் (அவுஸ்திரேலியா), சந்திரகுமார் (லண்டன்), றன்ஜித்குமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (8 - 8 - 93) கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி C. செல்லராஜம்மா
(மனைவி)

இல. 81, பலாலி றோட்,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம். (26871)

## திருமதி க. செல்லக்கண்டு

கட்டுடையைச் சேர்ந்த திருமதி க. செல்லக்கண்டு 08 - 08 - 93 ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இளைப்பாறிய P. W. D. ஓவசியர் கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகராஜா, காலஞ்சென்ற திரவியராஜா, ஜெயராஜா (கிறவுண்ஸ்), செல்வராணி, விமலராஜா, விவேகானந்தராஜா (சவுதி), மனோரஞ்சிதராணி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சொர்ணகாந்தி, சரஸ்வதி, திலகவதி, ஞானபண்டிதர் (இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்), சர்வானந்தன் (வீதி அபிவிருத்தி சபை திணைக்கள ஒப்பந்தகாரர்) ஆகியோரின் மாமியாரும், சாந்தரூபன், சாந்திமதி, உமாசுதன், உமாசங்கர், உமாகாந்தன், உமாகரன், செல்வஜீவன், ஞானநதி, விஜிதா, வைதேகி, பிரதீபன், சுமதினி, மதிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் செவ்வாய்க்கிழமை (10-08-93) காலை 11 மணிக்கு அன்னாரது கட்டுடை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஜெயராஜா
[மகன்]

கட்டுடை,
மானிப்பாய். (26878)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 9-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org